மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : இந்த வற்புறுத்தலில் தமிழக அரசிற்கு தனித் திறமை இருக்கிறது. மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியன் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அப்படி வற்புறுத்துவதன் காரணமாகத்தான் ஒரு தேதியிட்டு, இனிமேல் வசூலிக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதில் வெற்றி பெறுவோம் என்று நம்புகிறோம்.

காஞ்சிபுரம் நகரத்திற்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

167—(*வினா எண் 18449) திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகரத்தில் தற்போதைய குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்ய அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் நகராட்சிக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான ஆய்வு வேலைகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முடித்து விட்டது. இதற்கான திட்ட அறிக்கை வாரியத்தினால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : இந்த குடிநீர் திட்டத்திற்காக, எந்தெந்தப் பகுதிகளிலிருந்து தண்ணீர் எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது ? ஏற்கனவே மேட்டுக் குப்பம், முசரக் குப்பம் போன்ற இடங்களில் விவசாயப் பணிகளுக்காக எடுக்கப்பட்ட ஆழ் துளைக் கிணறுகள் இருக்கின்றன. அந்தக் கிணறுகளை இந்தக் குடிநீர்த் திட்டத்தில் பயன்படுத்திக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நகராட்சி வேண்டுகோளின்படி 1982 ஆம் ஆண்டில் 1.21 இலட்சத்தில் ஆய்வு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. '' தட் இஸ் இன்வெஸ்டிகேஷன் '' — வாரியத்தால் அனுமதி வழங்கப்பட்டது. இந்தத் தொகையை காஞ்சிபுரம் நகராட்சி, வாரியத்திற்கு செலுத்திவிட்டது. விரைவான ஆய்வுகள் வாரியத்தால் செய்யப்பட்டு, முடிந்து விட்டன. இதற்கான திட்ட அறிக்கை 1984-85-க்கு வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. வாரியம் தயார் செய்து அரசிற்கு வரும்போது மற்றைய சோர்ஸ் என்ன ? ஸ்கீமினுடைய காஸ்ட் என்ன என்ற தகவல்கள் எல்லாம் கிடைக்கும்.

1984 மார்ச் 5]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகராட்சி குடிநீர்த் திட்டத்தை எவ்வளவு காலத்தில் செயலாற்ற அரசு ஆணை இட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல திட்ட அறிக்கை 1984-85 ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டு, அந்த அறிக்கை அரசுக்கு வந்த பிறகு, எவ்வளவு விரைவிலே அதற்கு அனுமதி தர வேண்டுமோ அவ்வளவு விரைவில் அனுமதி தந்து, எவ்வளவு விரைவில் தொகை பெற வேண்டுமோ, அதைப் பெற்று, எவ்வளவு விரைவில் அதை அமுல்படுத்த முடியுமோ, அவ்வளவு விரைவில் அமுல்படுத்த எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படும்.

சென்னை இராயபுரம் தொகுதியில் சாக்கடை அடைப்பினால் ஏற்படும் சுகாதாரக்கேடு.

168—(*வினா எண். 19172) திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை இராயபுரம் தொகுதி புதிய 13-வது வட்டத்தில் உள்ள ஆதம்சாகிப் தெரு, ஆண்டியப்ப முதலி தெரு, அப்பையர் சந்து ஆகிய இடங்களில் அடிக்கடி சாக்கடை அடைப்பு ஏற்பட்டு சுகாதாரக்கேடு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிரந்தரமாக நிவர்த்தி செய்ய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (அ) ஆம்.

(ஆ) அப்பையர் சந்து, ஆண்டியப்ப முதலி தெரு ஆகிய இடங்களில் மாட்டுக் கொட்டகைகள் அதிகம் இருப்பதால் கழிவு நீர் தடை நேரிடுகிறது. இவை உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றன. ஆதம்சாகிப் தெருவின் கழிவுநீர்க் குழாய்கள் பழுதடைந்து இருக்கின்றபடியால் கழிவுநீர்த்தடை அடிக்கடி ஏற்படுகிறது. குழாய் மாற்றும் வேலை விரைவில் தொடங்க இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS